**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 110/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பாண்டியம்மாள்** | Caste | : | |
| Father/Husband Name | : | **சின்னபாண்டி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.08.2024**

**முதல் விசாரணை**

நான் டி. இராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் அம்மாவிற்கும் எதிரிக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக எழுமலை காவல் நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது. இந்நிலையில் 18.03.2019 ஆம் தேதியில் இரவு 08.00 மணியளவில் எழுமலை காவல் நிலையத்தில் விசாரணை முடித்து நானும், எனது கணவரும் TVS XL வாகனத்தில் எங்கள் ஊர் பொது மேடை அருகே வரும்பொழுது, எதிரி விறகு கட்டையால் எனது கணவரின் பின்தலையில் ஓங்கி அடித்தார். எனது கணவர் கீழே விழுந்துவிட்டார், பின்னர் எதிரி காலால் எனது கணவரின் நெஞ்சில் ஓங்கி மிதித்தார். பின்னர் எனது கணவரின் இடது காலில் கட்டையால் அடித்தார். பின்பு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், போலீசாரும் வந்தார்கள். ஆம்புலன்சில் எனது கணவரை ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். எதிரி எங்களை பார்த்து தேவுடியா, அவுசாரி என்று கீழ்தரமான வார்த்தைகளால் பேசினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

போலீசார் எங்களை மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையின்போது எனது அம்மாவிற்கும் எதிரிக்கும் இடப்பிரச்சனை இருந்தது பற்றி சொன்னேன். எழுமலை காவல் நிலையத்தில் விசாரணை செய்து அனுப்பி வைத்ததை பற்றியும் சொன்னேன். மருத்துவமனை தவிர வேறு எங்கள் போலீசார் எங்களை விசாரணை செய்யவில்லை. மருத்துவமனையில் எனது அம்மா இல்லை. பட்டியல் சாட்சிகள் மல்லிகா, பெருமாள், வேல் ஆகியோர் எனது ஊர்காரர்கள். பெருமாள் எனது மாமா ஆவார். பெருமாள் வீட்டு முன்புதான் சம்பவம் நடைபெற்றது. நான் சொன்னதுபோல் எதிரி எங்களை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் எழுமலை காவல் நிலைய போலீசார்கள் வந்தார்கள். எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக உள்ளார். மேற்படி இடப்பிரச்சனை சம்பந்தமாக எனது அம்மாவிற்கும் எதிரிக்கும் மதுரை DRO நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், எனது கணவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எனது அம்மாவை போலீசார் விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.12 13:48:30 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 110/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சின்னபாண்டி** | Caste | : | |
| Father/Husband Name | : | **மாறப்பன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.08.2024**

**முதல் விசாரணை**

நான் டி. இராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மாமியார் மாரியம்மாள் அவருக்கு சொந்தமான வீடு டி. இராமநாதபுரத்தில் உள்ளது. அந்த வீட்டிற்கு எதிரியும் அவரது அம்மாவும் சொந்தம் கொண்டாடி பிரச்சனை செய்தார்கள். 01.03.2019 ஆம் தேதியில் மதிய நேரத்தில் எதிரியும் அவரது அம்மாவும் பிரச்சனை செய்தார்கள். நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 15 நாட்களாக விசாரணை செய்தார்கள். விசாரணையில் எதிரியை எச்சரித்தார்கள். பின்னர் நாங்கள் மேற்படி வீட்டில் சிறு சிறு வேலை செய்து கொண்டிருந்தோம். பின்பு 15 நாட்கள் கழித்து மதிய நேரத்தில் எதிரியின் அம்மா மீண்டும் பிரச்சனை செய்தார். எழுமலை காவல் ஆய்வாளரிடம் மனு கொடுத்தோம். 2 நாட்கள் கழித்து வரசொன்னார்கள். எதிரியையும், அவரது அம்மாவையும் எச்சரித்து

அனுப்பினார்கள். பின்னர் நானும், எனது மனைவியும் TVS XL இருசக்கர வாகனத்தில் 18.03.2019 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் டி. இராமநாதகபுரம் பொதுமேடை அருகே வந்து கொண்டிருந்தபோது, எதிரி கம்பை வைத்து எனது முதுகில் ஓங்கி அடித்துவிட்டார். பின்னர் நான் கீழே விழுந்தவுடன் எனது நெஞ்சில் ஓங்கி மிதித்தார். பின்னர் தேவிடியா மகனே உன்னை கொன்றுவிடுவேன் என்று கட்டையால் எனது காலில் அடித்தார். பின்பு என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின்பு ஆம்புலன்சு மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யதார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பாண்டியம்மாள் எனது மனைவி என்றால் சரிதான். மல்லிகா, பெருமாள் ஆகியோர் எங்கள் தெருவில் உள்ளவர்கள். வேல் என்பவர் ஊர்காரர். மல்லிகா, பெருமாள் ஆகியோர் எனது அண்ணனுடைய மகன் மற்றும் மருமகள் ஆவார்கள். வழக்கிற்காக நான் ஊர்காரர்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதபடிக்க தெரியும். நான் டி. இராமநாதபுரம் மற்றும் எழுமலை காவல் நியைலத்தில் எனது மனைவி மூலம் புகார் எழுதி கொடுத்தேன். இந்த வழக்கில் போலீசார் மருத்துவமனையில் என்னிடம் வந்து வாக்குமூலம் பெற்று சென்றார்கள். அந்த வாக்குமூலத்தில் எனது மனைவி சாட்சி கையொப்பம் செய்தார். மேற்படி எனது புகார் வாக்குமூலத்தில் எனது மாமியாருக்கும் எதிரிக்கும் உள்ள பிரச்சனையை சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் எனது மாமியாரை சாட்சியாக விசாரணை செய்தார்களா என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. மேற்படி இடப்பிரச்சனை சம்பந்தமாக எனது மாமியாருக்கும் எதிரிக்கும் மதுரை DRO நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னதை மருத்துவரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் என்னுடைய புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த அன்று நானும் எனது மனைவியும் வாகனத்தில் எங்கியிருந்து எங்கு சென்றோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எனது மாமியாருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த கெட்ட வார்த்தை சொல்லியும் என்னை திட்டவில்லை என்றால் சரியல்ல. போலீசார் வாக்குமூலம் பெற்ற பிறகு என்னை விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக எழுத்து பூர்வமாக நானோ, எனது மனைவியோ எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.12 13:48:46 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**